10/=




# எதிரொலி
Ethiroli

குரல் 01 அதிர்வு 16 வியாழக்கிழமை மே 18 2017 ethirolimedia@gmail.com 021 300 48 48




## கிளிநொச்சியில் சிங்கக்கொடி

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தினமான இன்று , அதற்கு எதிராக கிளிநொச்சி நகரில் 'மகாசேன பலகய' என்ற இனவாத அமைப்பால் தனிச்சிங்கக்கொடி ஏற்றப்பட்டுள்ளது. கிளிநொச்சி நகரின் மத்தியில் அமைந்துள்ள மின்விளக்குத்தூண்களில் இன்று காலை 10 மணியளவில் ஏறிய , இந்த அமைப்பைச் சேர்ந்த சிலரே இவ்வாறு இனவெறியைத் தூண்டும் வகையில் சிங்கக் கொடியை ஏற்றி, அதனை சமூக வலைத்தளங்களிலும் பதி விட்டுள்ளனர். (அ)



# தமிழர் தாயகத்தில் இன்று நினைவேந்தல்

இறுதிப்போரின்போது படுகொலை செய்யப்பட்ட பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்க ளுக்கான நினைவேந்தல் இன்று தமிழர் தாயகத்தில் பரவலாக அனுஷ்டிக்கப்பட்டது.

பிரதான நினைவேந்தல் நிகழ்வு படுகொலைகள் இடம்பெற்ற முள்ளிவாய்க்காலில் வட மாகாண சபையின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், வட மாகாண சபை உறுப்பினர்கள், பொதுமக்கள் என ஏராளமானோர் இதில் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்.

## 200 இணையங்களில் பறக்கிறது புலிக்கொடி




முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தினத்தில் இலங்கையைத் தளமாகக் கொண்ட 200க்கும் மேற்பட்ட இணையத்தளங்களை 'தமிழ் நொன்' என்னும் இணைய ஊடுருவிகள் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து முடக்கினர். இந்தத் தளங்க ளின் முகப்பில் புலிக்கொடியையும், முள்ளிவாய்க்கால் அழிவுப் படங்களையும் பதிவிட்டுள்ளனர் இந்த இணைய ஊடுருவிகள்.

அத்துடன் தமிழர்களின் வீரத்தைச் சொல்கின்ற குரல் இணைப்பையும் அதில் ஒலிபரப்பச் செய்துள்ளனர். இவ்வாறு முடக்கப் பட்ட இணையத்தளங்களில் பெரும்பாலானவை சுற்றுலாவை மையமாகக் கொண்டவை. சில அரச இணையங்களும் இந்தத் தாக்குத லுக்கு இலக்காகியுள்ளன. (அ)

## கொற்றாவத்தையில் கிளைமோர்



கொற்றாவத்தை ஆண்டான் வளவுக்கு அருகாமையில் அமைந்துள்ள பற்றைக்குள்ளி ருந்து நேற்று மாலை கிளை மோர் ஒன்று மீட்கப்பட்டுள் ளது. சுமார் 20 கிலோ எடையுடைய குறித்த குண்டு யுத்த காலத்தில் மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம் எனக் கூறப்படுகின்றது. குண்டினைச் செயலிழக்கச் செய்யும் நடவ டிக்கையில் ராணுவத்தினரும் பொலிஸாரும் ஈடுபட்டுள்ளனர். (உ-11)

## வெள்ளவத்தையில் பெரும் அனர்த்தம் 7 மாடிக் கட்டடம் திடீர்ச் சரிவு!




வெள்ளவத்தை சவோய் திரையரங்குக்கு அருகில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டு வந்த 7 மாடிக்கட்டடமொன்று இன்று காலை திடீரென இடிந்து விழுந்தது. இதில் சிக்கி 23 பேர் படுகாயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்கள் களுபோவில மற்றும் கொழும்பு தேசிய வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் எண்மரின் நிலை மிகவும் கவலைக் கிடமாக உள்ளதாகத் தெரியவருகிறது. இன்னும் பலர் கட்டட இடிபாடுகளுக்குள் சிக்கியிருக்கலாமெனவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ-5)



## சம்பந்தருக்கு எதிர்ப்பு

வடமாகாண சபையின் ஏற்பாட் டில், இன்று முள்ளிவாய்க்காலில் நினைவேந்தலில் வட மாகாண முதலமைச்சருக்கு அடுத்ததாக உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தருக்கு எதிராக பொதுமக்கள் கோஷ மிட்டுள்ளனர்." நினை வேந்தல் நிகழ்வை அரசியல் மேடை யாக்க வேண்டாம்" என்றுகூறியே மக்கள் அவருடைய உரைக்கு பலத்த எதிர்ப்பு தெரிவித்தனர்.

இதனால் சில நிமிடங்கள் அங்கு சலசலப்பு உண்டா னது. சம்பந்தர் தன் பேச்சை உடனடியாக நிறைவு செய்தார்.

## ரணில்–மைத்திரி–சந்திரிகா–மஹிந்த இரகசியப் பேச்சு!

கொழும்பு அரசியலில் பரபரப்பு

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆகியோருக்கு இடையில் நேற்று இரவு முக்கிய கலந்துரையாடல் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்றுள்ளது.

எதிர்வரும் தினங்களில் மேற்கொள்ளப்படவுள்ள அமைச்சரவை மாற்றங்கள் தொடர்பாகவே இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றதாக உயர்மட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை அமைச்சர வையில் செய்யப்படும் மாற்றங்கள் தொடர்பில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் மஹிந்த அமரவீர தலைமையில் மற்றொரு பேச்சு கட்சி உறுப்பினர்களிடையே கொழும்பில் நேற்றிரவு இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-5)

## மீண்டும் வேவு விமானம்

பல வருடங்க ளுக்கு பின்னர் முல் லைத்தீவு வான்பரப் பில் இன்று காலை முதல் மதியம் வரை வேவு விமானங்கள் பறந்து திரிந்தன.



முள்ளிவாய்க்காலில் இன்று நடைபெற்ற நினைவேந்தல் நிகழ்வில் பொதுமக்கள் சுட்டெரிக்கும் வெயிலுக்கு நடுவில் கண்ணீர் மல்கி அஞ்சலி செய்கையில், எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன், தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜா, வட மாகாண முதல்வர் விக்னேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் ஆகியோர் பாதுகாவலர்களின் குடைக்குள் ஒய்வெடுத்தபோது...

ஐ.தே.க அமைச்சர்களின் எதிர்ப்பை மீறி

## நாளை அமைச்சரவை மாற்றம்?

நாளைய தினம் அமைச்சரவையில் மாற்றம் செய்யப்பட உள்ளதாக கொழும்பு அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின் றன. எனினும் ஐக்கிய தேசியக் கட்சியை பிரதிநிதித்துவம் செய்யும் முக்கிய அமைச்சர்கள் சிலர் இந்த அமைச்சரவை மாற்றத்திற்கு கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

அமைச்சரவையில் மாற்றம் செய்யப்பட் டால் தாம் சுயாதீனமாக இயங்க நேரிடும் என அவர்கள் குறிப்பிட்டுள் ளார். தாம் வேறு எந்தவொரு அமைச்சி னையும் பொறுப்பேற் றுக் கொள்ளத் தயா ரில்லை என ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு அறிவித்துள்ளனர். (ஊ)

# டிரம்ப் மீது விசாரணை




அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் டிரம்ப் வெற்றி பெற ரஷ்யா உதவி செய்ததா எனும் விவகாரத்தை விசாரிக்க சிறப்பு அதிகாரி ஒருவரை அமெரிக்க சட்டத்துறை நியமித்துள்ளது.

சிறப்பு அதிகாரியாக உள்நாட்டு புலன்விசாரணை அமைப்பான எஃப்.பி.ஐயின் முன்னாள் தலைவர் ரொபர்ட் முல்லரை சட்டத்துறை நியமனம் செய்துள்ளது.

இந்த விசாரணையை நடத்தி வந்த அதிகாரி கோமியை டிரம்ப் சென்ற வாரம் பதவி நீக்கம் செய்தார். மேலும் தன்னைச் சந்தித்த ரஷ்ய வெளியுறவுத்துறை அமைச்சர் லாவ்ரோவ்விடம் ஐ.எஸ். இயக்கம் தொடர்பான உளவுத் தகவல்களையும் டிரம்ப் அளித்துள்ளார்.

குறித்த இரண்டு விவகாரங்களும் அமெரிக்க அரசியல் வட்டாரத்தை தற்போது உலுக்கி வருகின்றன. கட்சி பேதமின்றி பாரபட்சமற்ற விசாரணையை நடத்த வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோரியுள்ளனர். சிலர் டிரம்பை பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்று கூட கோரிக்கை விடுத்துள்ளனர்.

## தேவையற்றது



டிரம்ப் விவகாரம் குறித்து ரஷ்யாவின் அதிபர் விளாடிமிர் புடின் மறுப்புத் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த புடின்,

"அமெரிக்க அதிபர டிரம்ப் மற்றும் எங்கள் வெளியுறவுத்துறை அமைச்சர் சந்திப்பில் எந்தவிதமாக ரகசியங்களையும் பரிமாறிக்கொள்ளவில்லை."

மேலும், இதுதொடர்பான உரையாடல் பதிவுகளையும் தேவைப்படும் பட்சத்தில் அமெரிக்காவின் எதிர்க்கட்சிகளிடம் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். இதுகுறித்து அவர் மீதான விசாரணை தேவையற்றது" - என்றார்.




## நாய்க்கு தூக்கு!

பாகிஸ்தானின் பஞ்சாப் மாகாணத்தில் ஒரு குழந்தையை கடித்த நாய்க்கு மரண தண்டனை வழங்கி விசித்திர தீர்ப்பு ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

நாய் செய்த தவறுக்காக அதை வளர்த்து வந்தவருக்கு ஏற்கனவே ஒரு வார சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. அவரும் அந்த தண்டனையை அனுபவித்து விட்டு வெளியே வந்துள்ளார். தற்போது தனது நாய்க்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையை எதிர்த்து அவர் நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்துள்ளார்.

## பூமியாக மாறிய செவ்வாய்



கனமழையால் பூமியின் மேற்பரப்பைப் போன்று செவ்வாயின் மேற்பரப்பு கடின தன்மையுடன் மாறியுள்ளது என விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

செவ்வாய்க் கிரகத்தில் 2039ஆம் ஆண்டுக்குள் விண்வெளி ஆராய்ச்சி வீரர்களை தரையிறங்க வைக்க முடியும் என அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான நாசாவின் விஞ்ஞானிகள் நம்பிக்கையுடன் உள்ளனர். இந்நிலையில் இந்தத் தகவல் அவர்களுக்குக் மகிழ்ச்சியைக் கொடுத்துள்ளது.

## "அரசியலுக்கு வருவீர்களா?" ரஜினி பதில்

தனது ரசிகர்களை இன்று 4ஆவது நாளாக சந்தித்துவரும் ரஜினிகாந்த், அரசியல் விவகாரம் குறித்துத் தன்னிடம் கேட்க வேண்டாம் என ஊடகங்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அண்மையில் அரசியல் குறித்த கருத்துக்களை ரஜினி தெரிவித்திருந்த நிலையில், மத்திய அமைச்சர் பொன் ராதா கிருஷ்ணன் 'ரஜினிகாந்த் பா.ஜனதாவுக்கு வந்தால் அவரை வரவேற்போம்'



என்று கருத்துத் தெரிவித்திருந்தார்.

இதுகுறித்து செய்தியாளர்கள் ரஜினியிடம் கேள்வி எழுப்பினார்கள். அதற்கு ரஜினி பதிலளித்த ரஜினி,

"அரசியலுக்கு வருவது குறித்து இப்போதைக்கு எதுவும் கூற முடியாது. எனது கருத்தை ஏற்கனவே தெளிவாகக் கூறி விட்டேன். அரசியல் பற்றிய கேள்விகளுக்கு பதில் சொல்ல விரும்பவில்லை" என்றார்.

## 4 முறை உச்சம் தொட்ட பெண்



இந்தியாவின் அருணாச்சலப் பிரதேசத்தை சேர்ந்த மலை ஏறும் வீராங்கனை அன்சுஜாம் சென்பா, கடந்த 6 ஆண்டுகளில் 4ஆவது முறையாக எவரெஸ்ட் சிகரத்தில் ஏறி சாதனை படைத்துள்ளார்.

2011ஆம் ஆண்டு இவர் முதல் முறையாக உலகின் மிக உயர்ந்த சிகரமான எவரெஸ்ட்டில் ஏறினார். 10 நாட்கள் இடைவெளியில் இவர் மீண்டும் எவரெஸ்ட் உச்சிக்கு சென்றார். அதன்பின் 2013ஆம் ஆண்டு 3ஆவது முறையாக எவரெஸ்ட் உச்சிக்கு சென்றார். தற்போது அவர் 4ஆவது முறையாக எவரெஸ்ட் சிகரத்தில் ஏறி சாதனை படைத்துள்ளார்.

இவரின் சாதனையை அருணாச்சல முதல்வர் பீமா வாழ்த்தியுள்ளார்.



## குடும்பத்தை கவனிக்க சம்பளம் போதவில்லை

"உள்ளூர் முதல் தர போட்டிகளில் விளையாடும் வீரர்களுக்கான சம்பளம் மிகவும் குறைவாக இருக்கிறது. இதனை வைத்துக் கொண்டு வீரர்கள் குடும்பத்தைக் கவனிப்பது சிரமமானது.

"எனவே முதல் தர போட்டிகளில் பங்கேற்கும் வீரர்களின் சம்பளத்தை அதிகரிக்க, இந்திய கிரிக்கெட் சபையிடம் கூறி நடவடிக்கை எடுங்கள்" என கும்ப்ளேவுக்கு ஹர்பஜன்சிங் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணி வீரர்களுக்கு புதிய ஊதிய ஒப்பந்தம் சமீபத்தில் கொண்டுவரப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## நீளமான பூனை



120 செண்ரி மீற்றர் நீளமுடைய பூனை ஒன்று உலகின் நீளமான பூனை என்ற சாதனையைப் படைக்கவுள்ளது.

கின்னஸ் உலக சாதனை அமைப்பு, தன்னைத் தொடர்பு கொண்டு பூனையின் அளவை அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொண்டது எனத் தெரிவித்த அதன் உரிமையாளர் ஹிஸ்ட், அதற்கிணங்க தகவல்கள் அனுப்பியுள்ளேன் என்றார்.

தற்போது 118 செற்றி மீற்றர் உள்ள பூனையே உலகின் நீண்ட பூனையாக உள்ளது.

## மீட்கப்பட்ட கோடிகள்



சென்னையில் காவலர் உடைகள் விற்பனை செய்யும் துணிக்கடையில் 45கோடி ரூபா மதிப்புள்ள பழைய ரூபா நோட்டுகள் சிக்கியுள்ளன.

சென்னை கோடம்பாக்கத்தில் ராமநாதன் அன்ட் சன்ஸ் என்ற நிறுவனத்தை நடத்திவரும் தண்டபாணி என்பவர் சினிமா படப்பிடிப்புக்குத் தேவையான பொலிஸ் சீருடைகளை இந்த நிறுவனத்தில் விற்பனை செய்து வருகிறார்.

இந்நிலையில் இன்று காலை வருமான வரித்துறை அதிகாரிகள் பொலிஸாரின் துணையுடன் இங்கு சோதனை நடத்தியபோது 45 கோடி ரூபா (பழைய 500 மற்றும் 1000 ரூபா நோட்டுகள்) அங்கு பதுக்கி வைக்கப்பட்டிருந்தது தெரியவந்தது.

இதைப் பறிமுதல் செய்த பொலிஸார் தீவிர விசாரணை நடத்தினர். மேலும் இந்த வழக்கு குறித்த விசாரணையை வருமான வரித் துறை இன்றே தொடங்கியுள்ளது.

தண்டபாணி பா.ஜ.கவை சேர்ந்தவர் என்று கூறப்படுகிறது.

## துப்பாக்கி முனையில் காதலி செய்த கடத்தல்



உத்தரபிரதேசத்தில் திருமண மண்டபத்தில் இருந்த மணமகனை துப்பாக்கி முனையில் காதலி கடத்தி சென்ற சம்பவம் அங்கு இருந்தவர்களை கடும் அதிர்ச்சிக்குள்ளாக்கிள்ளது.

உத்தரபிரதேச மாநிலம் ஹமிப்பூர் குன்டேல்கண்ட் கிராமத்தைச் சேர்ந்த அசோக் யாதவ். இவர் அப்பகுதியில் உள்ள மருத்துவமனையில் பணியாற்றி வருகிறார். அப்போது தன்னுடன் வேலை பார்க்கும் பெண்ணை காதலித்து வந்தார்.

இந்நிலையில் அசோக் யாதவுக்கு வேறு ஒரு பெண்ணுடன் திருமணம் முடிந்து, நேற்று திருமண வரவேற்பு நிகழ்ச்சி நடந்தது. அதன்போது திருமண மண்டபத்துக்கு அசோக் யாதவை, அவரின் காதலி 3 வாலிபர்களுடன் காரில் வந்து துப்பாக்கி முனையில் கடத்தி சென்றார்.

## 150 அடி பள்ளத்துக்குள் பாய்ந்த முச்சக்கரவண்டி



நானுஓயா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பகுதியில் முச்சக்கரவண்டி ஒன்று வீதியை விட்டு விலகி சுமார் 150 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளானதில் ஒருவர் படுங்காயமடைந்துள்ளார். நானுஓயா நகரத்திலிருந்து உடரதல்ல தோட்டத்திற்கு சென்றுக்கொண்டிருந்த குறித்த முச்சக்கர வண்டியே நேற்று இரவு 10.30 மணிக்கு வீதியை விட்டு விலகி இவ்வாறு விபத்துக்குள்ளாகியது. (உ)

# இன்றைய கருத்தோவியம்




## நாயைப் போல் இழுத்து சிறையிலடைக்க வேண்டும்

“நாங்கள் ஆட்சிக்கு வந்தால் முஸ்லிம்களுக்கு எதிராக இனவாதமாக செயற்படுகின்ற ஞானசார தேரரை நாயை இழுத்துச் சென்று அடைப்பது போன்று சிறைக்குள் தள்ளி தகுந்த நடவடிக்கை எடுப்போம் என்று முன்னாள் ஜனாதிபதி சந்தி ரிகா பண்டாரநாயக்க கடந்த தேர்தல் பிரசாரத்தின்போது வாக்குறுதி அளித்திருந்தார். எனவே பௌத்த தீவிரவாதிகள் மீது அவசரமாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவரும் விளையாட்டுத்துறை பிரதி அமைச்சருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

முஸ்லிம்களுக்கு எதிராக தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்ற இனவாத செயற்பாடுகள் தொடர் பில் அவர் நேற்று ஊடகங்க ளுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே இதனைக் குறிப்பிட்டார். (உ)



முடிந்தால் தேர்தலை நடத்திப்பாருங்கள்

## அரசாங்கத்திற்கு மகிந்த சவால்

அரசாங்கத்திற்கு வெற்றி பெறுவோம் என்ற தைரியம் இருந்தால் மூன்று மாகாணசபைத் தேர்தல்களையும் நடத்துமாறு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சவால் விடுத்துள்ளார். “தேர்தல்களில் வெற்றியீட்ட முடியும் என அரசாங்கம் பிரசாரம் செய்து வருகின்றது. அவ்வாறு என்றால் ஏன் அரசாங்கத்தினால் தேர்தல்களை நடத்த முடியவில்லை. தேர்தல் நடத்தினால் யாருக்கு மக்கள் ஆதரவு காணப்படுகின்றது என்பதனைத் தெளிவாக அறிந்து கொள்ள முடியும்” எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஊ)

ஆணைக்குழுக்களின் தலைவர்களுடன்

## ஜனாதிபதி சந்திப்பு



19ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் தாபிக்கப்பட்ட சுயாதீன ஆணைக் குழுக்களின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன தலைமையில் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது. அரச சேவைகள் ஆணைக்குழு, தேர்தல்கள் ஆணைக்குழு, தேசிய பொலிஸ் ஆணைக்குழு, கணக்காய்வு சேவை ஆணைக்குழு, இலங்கை மனித உரமைகள் ஆணைக்குழு, நிதி ஆணைக்குழு, எல்லை நிர்ணய ஆணைக்குழு, தேசிய கொள்முதல் ஆணைக்குழு ஆகியவற்றின் தலைவர்கள், செயலாளர்கள் உள்ளிட்ட பிரதிநிதிகளின் பங்குபற்றுதலுடன் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் இந்த ஆணைக்குழுக்களுக்கான புதிய முன்மொழிவுகள் மற்றும் ஆலோசனைகளும் முன் வைக்கப்பட்டன. (உ-5)

திருகோணமலையில்

## ஆஸ்திரேலிய “ஓசன் சீல்ட்”




இரண்டு நாள் விஜயத்தை மேற்கொண்டு ஆஸ்திரேலிய “ஓசன் சீல்ட்” நேற்று இலங்கையை வந்தடைந்துள்ளது. திருகோணமலைக்கு விஜயம் செய்த பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவத்தன திருகோண மலை துறைமுகத்தில் நங்கூரமிட் டுள்ள ஆஸ்திரேலிய கப்பலைப் பார்வையிட்டார். இதன் போது இலங்கையிலுள்ள ஆஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் பிரிசி ஹட்ஷன் மற்றும் அரச அதிகாரிகள், சிரேஷ்ட கடற்படை அதிகாரிகள், கப்பல் மாலுமிகள் ஆகியோர் இந்த நிகழ் வில் கலந்துகொண்டனர்.(உ-5)



முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் அஞ்சலி நிகழ்வு இன்று காலை 9.30 மணியளவில் இன்பருட்டி கிராம அபிவிருத்தி சங்கத்தில் நடைபெற்றது. ஊர் மக்கள் மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள். (உ-9)

## வடக்கின் மங்கைக்கு கௌரவம்



தேசிய கோலூன்றிப் பாய்தல் போட்டிகளில் சாதனை படைத்துவரும் மகாஜனக் கல்லூரி மாணவி ஜெ.அனித்தா பாராட்டிக் கௌரவிக்கப்பட்டுள்ளார். குப்பிளான் குறிஞ்சிக் குமரன் விளையாட் டுக் கழகம் நடத்திய உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியும் தேசிய வீரர்கள் பயிற்றுவிப்பாளர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் நேற்று இடம்பெற்றது. நிகழ்வில் ஜெ.அனித் தாவுவுக்கு சிவன் பவுண்டேசன் நிறுவுநர் வேலாயுதம் கணேஸ் வரன் 25 ஆயிரம் ரூபா பணத்தை வழங்கிக் கௌரவித்தார். (உ-23)



வல்வெட்டித்துறை யா/ சிதம்பரக் கல்லூரியில் நேற்றுப் புதன்கிழமை கணித மூலவள நிலையம் திறந்து வைக்கப்பட்டது. கல்லூரியின் அதிபர் சி. குருகுலலிங்கம் அவர்களின் தலைமையில், வடமராட்சி கல்வி வலயத்தின் பிரதிக்கல்விப் பணிப்பாளர் யோ.ரவீந்திரனால் கணிதமூலவள நிலையம் திறந்துவைக்கப்பட்டது.

தடுப்புக்காவலில் பாலியல் துன்புறுத்தல்கள்

## அமெரிக்க ஆய்வு மையம் குற்றச்சாட்டு

இலங்கையில் போர் முடிவுக்கு வந்த பின்னரும், தடுத்து வைக்கப்பட்டுள்ள ஆண்கள் பாலியல் வதைகளுக்கு உட்படுத் தப்படுவதாக அனைத்துலக மனித உரிமை அமைப்பு ஒன்று குற்றம்சாட்டியுள்ளது. தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழர்கள் மீதான சித்திரவதையாக, பாலியல் தாக்குதல்கள் தொடர்ச்சியாக நடத்தப்பட்டு வருகிறது என்று அமெரிக்காவைச் சேர்ந்த ‘ஆய்வுகளுக்கான செயற்றிட்டம்’ என்ற ஆய்வு அமைப்பின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. போரின் போதும், போருக்குப் பின்னரும் தமிழர்களுக்கு எதிராக, ஆண்கள் மீதான பாலியல் துன்புறுத்தல்கள் இடம்பெற்றதற்கான பதிவுகளை ஆவணப்படுத்தியுள்ளதாக அமெ ரிக்க ஆய்வு நிறுவனம் கூறுகிறது. (ஊ)

## நாளை நாளும் கோளும்

19.05.2017 வெள்ளிக்கிழமை ஏவிளம்பி வருடம் வைகாசி மாதம் 05ஆம் நாள்.

அட்டமி பி.ப. 01.37 வரை | அவிட்டம் காலை 06.44 வரை | மரணயோகம்
இராகுகாலம் 10.22-11.52 | சுபநேரம் 05.52-07.22 | எமகண்டம் 02.52-04.22

கொடியேற்றம்
- புங்குடுதீவு மேற்குப் பிள்ளையார்
- இணுவில் பரராஜசேகரப்பிள்ளையார்

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| வெற்றி | சுகம் | வாழ்வு | அமைதி | உயர்வு | ஜெயம் | போட்டி | ஆதாயம் | தனம் | நற்செயல் | ஆதரவு | நன்மை |

## முல்லைத்தீவில் கடையடைப்பு



இறுதிப் போரின்போது உயிரிழந்த பொதுமக்களை நினைவுகூரும் வகையில், இன்று வியாழக்கிழமை முழுவதும், முல்லைத்தீவு நகரில் அமைந்துள்ள சகல வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டு கடையடைப்பு அனுஷ்டிக்கப்பட்டது. முல்லைத்தீவு மற்றும் புதுக்குடியிருப்பு வர்த்தக சங்கம் அழைப்பு விடுத்திருந்த இந்தக் கடையடைப்புக் காரணமாக, பொதுமக்களின் அன்றாட செயற்பாடுகள் முடங்கின. எனினும் அரச நிறுவனங்கள் மற்றும் வங்கிகள் அனைத்தும், வழமையான செயற்பாடுகளில் ஈடுபட்டன.(அ)




## முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்கள்


முள்ளிவாய்க்கால்


யாழ்.பல்கலைக்கழகம்


வவுனியா கல்லாறு


மன்னார் அடம்பன்

## அந்த நாள் ஞாபகம்.....!




### 2009.05.18

இலங்கையில் இடம்பெற்ற போர் முடிவுக்கு வந்தது. புலிகள் தமது ஆயுதங்களை மௌனிப்பதாக அறிவித்தனர். ஆயிரக்கணக்கான மக்கள் முள்ளிவாய்க்காலில் அரச படைகளால் படுகொலை செய்யப்பட்டனர்.

## தீயில் எரிந்த 5 மாடிக்கடை



வென்னப்புவ, மாரவில, தெமட்டபிட்டிய சந்திப் பிரதேசத்தில் உள்ள மின் உபகரணங்களை விற்பனை செய்யும் வர்த்தக நிலையம் ஒன்று தீப்பிடித்து எரிந்துள்ளது.

5 மாடிகளைக் கொண்ட குறித்த வர்த்தக நிலையத்தில் இன்று அதிகாலை 2 மணியளவில் இந்தத் தீவிபத்து ஏற்பட்டது.

இதனையடுத்து மாரவில பொலிஸார், சிலாபம் மற்றும் நீர்கொழும்பு நகரசபை தீயணைப்பு வீரர்கள் இணைந்து தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

தீயினால் உயிர்ச் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை.

### சுற்றாடல் விழிப்புணர்வு

ஜூன் 5ஆம் திகதி சர்வதேச சுற்றாடல் தினம் அனுஷ்டிக்கப்படுகிறது. அதனை முன்னிட்டு வலி.மேற்கில் உள்ள கிராம அலுவலகங்களில் விழிப்புணர்வு நிகழ்வுகள் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (அ-6)

### முதியோருக்கு உதவி

தனிமையில் வாழும் முதியவர்களுக்கு தியாகி அறக்கொடை நிலையத்தினர் மாதந்தோறும் 500 ரூபா கொடுப்பனவு வழங்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். (அ-6)

### வகுப்புத் தடை

வலி.மேற்குப் பிரதேசத்துக்கு உட்பட்ட தனியார் கல்வி நிலையங்களில் வெள்ளி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் வகுப்புகளை நடத்த கட்டுப்பாட்டு விதிக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் ஆன்மிக நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு வசதியாகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிய வருகிறது. (அ-6)

### அதிகரிப்பு

காசநோயாளிகளுக்கு சமூக சேவைகள் திணைக்களத்தினால் மாதந்தோறும் வழங்கப்பட்டு வந்த கொடுப்பனவு 5 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-6)

### யோகா பயிற்சி

சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு கைதடி சித்த மருத்துவ பீடத்தில் எதிர்வரும் 24ஆம் திகதி முழுநாள் யோகாசனப் பயிற்சிச் செயலமர்வு நடைபெறும். (அ-6)


### ஒழுங்கமைப்பு சீரில்லை

வடமாகாண சபையின் ஏற்பாட்டில் இன்று நடைபெற்ற முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுக்கான ஒழுங்கமைப்புகள் சீரில்லாமல் இருந்ததாக பொது மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். போக்குவரத்து, அஞ்சலிகள், நிகழ்வுகள் என்பன குழப்பமான முறையிலேயே நடைபெற்றன.

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபையின் ஏற்பாட்டில் அரச ஊழியர்களுக்கான ஆயுள்வேத மருத்துவகழக பரிசோதனையும் ரத்த அழுத்தத்திற்கான பரிசோதனையும் நடைபெற்றது. பிரதேசசபை செயலாளர் வினோராஜ் பரிசோதனையை ஆரம்பித்து வைத்தார். (எ-11)



## தமிழர் கால்பந்து அணி உருவாக்க முயற்சி



தமிழர்களை பிரதிநிதித்துவப்படுத்தும் வடமாகாணத்துக்கான கால்பந்தாட்ட அணி ஒன்று உருவாக்குவதற்கான நடவடிக்கை தற்போது இடம்பெற்றுவருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

“அந்த அணியை பலமிக்க அணியாக மாற்ற எம் மண்ணிலுள்ள உதைபந்தாட்ட ஆர்வலர்கள் முன்வர வேண்டும்” என சிவன் பவுண்டேசன் நிறுவுநர் வேலாயுதம் கணேஸ்வரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

குப்பிளான் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக்கழகம் நடத்திய கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டமும் பரிசளிப்பு நிகழ்வும் நேற்று இடம்பெற்றன. அதில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (உ-23)

### வாசகர் கவனத்துக்கு...

**உங்கள் பிரதேச ஆலய, பாடசாலை, சன சமூக நிலைய, விளையாட்டு, நிகழ்வுகளை படங்களுடன் எமக்கு அனுப்பி வைத்தால் அன்றைய தினமே “எதிரொலி”யில் பிரசுரிப்போம். தகவல்களை** ethirolimedia@gmail.com **என்ற மின்னஞ்சல் முகவரியூடாகவோ தொலைபேசியூடாகவோ அனுப்பிவைக்கலாம்.**

### செய்தியாளர்கள் தேவை

‘எதிரொலி’ மாலைத் தினசரிக்கு யாழ். மாவட்டத்தின் சகல பிரதேசங்களிலிருந்தும் பிரதேச செய்தியாளர்கள் தேவை.

குறிப்பு: செய்திகள் மற்றும் புகைப்படங்களை உடனுக்குடன் மின்னஞ்சலில் அனுப்பக் கூடியவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

உங்கள் புகைப்படம் மற்றும் சுய விவரங்களை
ethirolimedia@gmail.com
என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 18.05.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.